ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது
අංක 2274/12 – 2022 අප්‍රේල් මස 06 වැනි බදාදා – 2022.04.06
2274/12 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதி புதன்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல : 3/6/2016/10.
காணி அமைச்சின் குறிப்பு இல : 4-3/7/2016/HW/129.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், பொல்கஹவலை பிரதேச செயலாளர் பிரிவில், உடபொல மெதலஸ்ஸ கோரலே மற்றும் உடபொல ஓதொட்ட கோரலே (கிழக்கு) சிறு பிரிவுகளில், இல. 912, கொரதெரலுவ மற்றும் இல. 893 பரபெவில கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள, பரபெவில மற்றும் கொரதெரலுவ கிராமங்களில் அமைந்துள்ள, குருநாகல் மாவட்ட நில அளவை அதிபதி சார்பாக நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைப்பட இல. கு 2343 இல் விபரிக்கப்பட்டுள்ள காணித் துண்டுகள் விஸ்தரிப்பதற்காக எடுத்துக்கொள்ளப்படுகின்றது:-

**01. துண்டு இல. 25**
காணியின் பெயர்: பரபெவிலவத்தை; காணியின் விபரம்: வீட்டுத்தோட்டம்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: மாப்பாஹாமில்லாகே துசித்தா சஞ்ஜீவனீ தமயந்தி மாப்பா; விஸ்தீரணம்: 0.0402 ஹெக்டயார்.

**02. துண்டு இல. 26**
காணியின் பெயர்: பரபெவிலவத்தை; காணியின் விபரம்: வீட்டுத்தோட்டம்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: ஸ்ரீயா ஷாந்தி குமாரி கருணாநாயக்க; விஸ்தீரணம்: 0.0173 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆந் திகதி மு. ப. 09.00 மணிக்கு பொல்கஹவலை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

டீ. அனோமா திசாநாயக்க,
பிரதேச செயலாளர்,
பொல்கஹவலை.

பிரதேச செயலகம்,
பொல்கஹவலை,
2022, ஏப்பிறல் 04.

EOG 04 - 0026

1A – G 36548 – 17 (2022/04) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.